**செய்தி வெளியீடு எண்: 016** **நாள்: 08.01.2019**

## செய்தி வெளியீடு

இவ்வாண்டு 2019 பொங்கல் பண்டிகையினை சிறப்பாக கொண்டாடிட, இடைத்தேர்தல் நடைபெறுவதாக இருந்த திருவாரூர் மாவட்டம் தவிர மாநிலத்தின் மற்ற மாவட்டங்களில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களும் பயன்பெறும் வகையில் 1 கோடியே 97 இலட்சத்து 98 ஆயிரத்து 102 குடும்பங்களுக்கு ஒரு குடும்ப அட்டைதாரருக்கு 1,000 ரூபாய் வழங்கிட இவ்வரசால் ஆணை வெளியிடப்பட்டு, அதன்படி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது இந்திய தேர்தல் ஆணையம் திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தல் ரத்து செய்யப்பட்டதாக தெரிவித்துள்ள நிலையில், திருவாரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களும் பயன்பெறும் வகையில் 3 இலட்சத்து 92 ஆயிரத்து 952 குடும்பங்கள் பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாடிட ஒரு குடும்ப அட்டைதாரருக்கு 1,000 ரூபாய் வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**